# ஈராக்கை நமது படைகள் திருப்பித் தாக்கவேண்டும்! இஸ்ரேலிய அமைச்சரவை வற்புறுத்தி வேண்டுகோள்

நேற்று இஸ்ரேலிய நேரப்படி அதிகாலை 2.40மணியளவில் இஸ்ரேல் தலைநகர் ரெல்அவிவ் மற்றும் ஐபா நகர்களின் மேல் ஈராக்கிய ஸ்காட் (Scad) ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்ததைத் தொடர்ந்து (முன்வந்த செய்தி உள்ளே) ஈராக் மீது பதில் தாக்குதல் நடாத்துவதா என இஸ்ரேலிய அமைச்சரவை கூடி ஆராய்ந்தது. பிரதமர் இட்ஷாக் ஷாமீர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவையில் அமைச்சர்கள் இஸ்ரேல் பதில் தாக்குதலை நடாத்த வேண்டும் என வற்புறுத்தினர். எனினும் அமெரிக்காவும் பிரிட்டனும் இஸ்ரேல் பதில்தாக்குதலை ஆரம்பிக்கவேண்டாம் என்றும் தகுந்த தாக்குதலை தாம் ஈராக் மீது நடாத்திவருகிறோம் என அறிவித்துள்ளன. இதேசமயம் தனது ஏவுகணைதாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட ஈராக் இத்தாக்குதல் இஸ்ரேலின் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு இலக்குகளை மையமாக வைத்தே தாக்கப்பட்டது. இத்தாக்குதல் இஸ்ரேல் மீதான ஆரம்பக்கட்டத் தாக்குதலே என குறிப்பிட்டுள்ளது. நேற்றுக்காலை நடத்தப்பட்ட இவ் ஏவுகணைத் தாக்குதல் முன்னர் அமெரிக்காவினால் அழிக்கப்பட்டு விட்டதாக கூறப்படும் ஈராக்கின் மேற்கு ஏவுதளத்தில் இருந்தே ஏவப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்க ராணுவ விமர்சகர்கள் ஈராக் நடமாடும் ஏவுதளங்களை நிலத்தின்கீழ் இருந்தவாறு இயக்குவதாக கூறினர். இதனிடையே ஈராக்கை

— 4ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 53 பிரமோதூத தை 06 (19-01-1991) சனி

## சுகாதாரப் பகுதி திணறுகின்றது

# தடுப்பூசி மருந்துகள் முற்றாக இல்லை!

## நெருப்புக் காய்ச்சல், வாந்திபேதி வேகமாகப் பரவும் ஆபத்து

**யாழ் போதனா வைத்தியசாலை உட்பட குடாநாட்டில் உள்ள சகல ஆஸ்பத்திரிகளிலும் தடுப்பூசிமருந்துகள் முற்றாகத்தீர்ந்துபோயுள்ளன.**

இத்தகவலை சுகாதாரத் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் முரசொலிக்கு தெரிவித்தார்.

போலியோ, குக்கல்,தொண்டைக்கரப்பான், ஈர்ப்புவலி, சின்னமுத்து, க்ஷயரோகம், விசர்நாய்க்கடி ஆகிய நோய்களுக்கு எதிராகக் கொடுக்கப்படும்தடுப்புமருந்துகளேமுக்கியமாக முடிவடைந்து விட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நெருப்புக் காய்ச்சல், கொலரா (வாந்தி பேதி) முதலிய நோய்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் தடுப்பூசி மருந்துகள் இன்மையால் இந்நோய்கள் வெகு வேகமாகப் பரவக்கூடிய ஆபத்து தோன்றியுள்ளது.

இதேவேளை, முன்னர் ஏற்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் பெரு வெள்ளம் வீடுகள் இடிந்து வீழ்ந்தன

கடந்த மூன்று தினங்களாகப் பெய்த அடை மழையினால் கிளிநொச்சியில் உள்ள சிறு குளங்கள் வடிகால் வாய்க்கால்கள், உடைத்து பிரதான வீதிகளை மூடி வெள்ளம் பாய்கிறது.

3 ஆம் வாய்க்கால், பரவிப்பாஞ்சான், கந்தசாமி கோயிலடிப் பகுதிகளில் மிகவும் மோசமாக வெள்ளம் பெருக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## போக்குவரவு பாதிப்பு

தொடர்ந்து பெய்யும் பெருமழையினால் பூநகரியூடான போக்குவரத்துக்கள் பாதிப்படைந்துள்ளன.

வீதிகளை மேவி வெள்ளம் பாய்ந்து கொண்டிருப்பதால் பல சிரமங்களுக்கு மத்தியிலேயே வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. (66, ப35)

## காசோலைகளை மாற்றத்தரகு புலிகளுக்கு சம்பந்தமில்லை

சம்பளக் காசோலைகளைப் பணமாக்குவதற்கு சில முதலாளிகள் ஆயிரம் ரூபாவுக்கு நூறு முதல் நூற்றைம்பது ரூபா வரை தரகுப்பணமாக பெற்றுக் கொள்வதாக முறையிடப்பட்டுள்ளது.

இந்தப் "பணமாக்கும்" பணியைப் புரிவோர் தமது நியாயமற்ற சுரண்டலுக்கு விடுதலைப்புலிகள் மீதும் பழி சுமத்தும் முயற்சியை மேற்கொண்டுள்ளதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வி. பு. மக்கள் முன்னணியால் விடுத்

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் ஆஸ்பத்திரியில் தினமும் நாய்களின் தொல்லைகள்

யாழ் பெரியாஸ்பத்திரியின் உள்ளே கட்டாக்காலி நாய்களின் தொல்லை தினமும் அதிகரித்து வருவதால் நோயாளிகளும், ஊழியர்களும் பெரும் கஷ்டமடைகின்றனர் நோயாளிகள் இல்லாத கட்டிடங்களில் இவை இரவு நேரம் படுத்துறங்குவதுடன் நோயாளிகளின் உணவுப்பார்சல்களையும் கவ்விக்கொண்டு செல்கின்றன. சுமார் ஐம்பது

—04 ஆம் பக்கம் பார்க்க

## 72 விமானங்கள் வீழ்த்தப்பட்டதாக ஈராக்

# பக்தாத் மீது கடும் குண்டுவீச்சு

## 7 விமானங்களை இழந்ததாக அமெரிக்கா

நேற்று அதிகாலை இஸ்ரேல் மீது ஈராக் ஸ்காட் ஏவுகணைத் தாக்குதல் நடாத்தியதைத் தொடர்ந்து ஈராக் மீது அமெரிக்க, பிரிட்டிஷ், பிரேஞ் யுத்தவிமானங்கள் கடும் தாக்குதலை இரண்டாவது நாளாகத் தொடர்ந்தன.

அமெரிக்காவின் போயிங் B-52 குண்டுவீச்சு விமானம் எப் – 117 பிரிட்டனின் ரொனாடோ தாக்குதல் விமானம், பிரேஞ்சின் ஜெகுவார் ஜெட் விமானங்கள் என்பன தாக்குதலில் ஈடுபட்டன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் ஈராக் ஆதரவு ஆர்ப்பாட்டம்

நேற்று நண்பகல் கொழும்பில் தொழுகையை முடித்து வந்த முஸ்லிம்கள் ஈராக்கிற்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஓர் பள்ளிவாசலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் கட்டுப்பாட்டை மீறவே பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டக்காரரை விரட்டினர்.

இதே சமயம் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ், அமெரிக்க தூதராலயங்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## அமெரிக்க மற்றும் நேசநாடுகள் அமைதிப்படையல்ல - இந்தியா

வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்க நேச அணிகள் எடுக்கும் ராணுவ நடவடிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது என ஐ. நாவில் இந்தியப்பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ஐ. நா சாசனப்படியே ராணுவநடவடிக்கை நடப்பதாக நியாயப்படுத்த முனைந்தாலும் அமெரிக்காவும் நேச அணிகளும் வளைகுடாவில் தாம் ஓர் ஐ. நாவின் அமைதிப்படையாக செயற்படுவதாக கருதிவிடக்கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஹுசைன் குடும்பத்தார் மொரிட்டானியாவிற்கு

வளைகுடாவில் தாக்குதல்கள் அதிகரித்து வருவதையடுத்து ஈராக் ஜனாதிபதி ஹுசையினின் குடும்பத்தவர்களும் அமைச்சர்களும் பாதுகாப்புக்கருதி மேற்கு ஆபிரிக்க நாடான மொரிட்டானியாவிற்கு சென்றுள்ளனர்.

எனினும் சதாம் ஹுசைன் நிலத்தடி பதுங்கு குழியில் இருந்து இராணுவ நடவடிக்கையை வழிநடத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

## முதல் நாள் போர் செலவாக அமெரிக்காவுக்கு 3 ஆயிரம் கோடி

பாரசீக வளைகுடாவில் அமெரிக்கா ஆரம்பித்துள்ள 'புயல் நடவடிக்கைக்கு' முதல் நாள் போரில் மட்டும் மூவாயிரம் கோடி இலங்கை ரூபா செலவாகியுள்ளதாக ராணுவ ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

உலகில் அதிகமான அளவு நச்சு ஆயுதங்களை கொண்ட ஈராக் தொடரும் போரில் அவற்றை உபயோகிக்க ஆரம்பித்தால் அதில் இருந்து தற்காத்துக்கொள்ளவே அமெரிக்கப்படைகளும் மேலும் பல கோடி ரூபா செலவாகும் எனக் கூறப்படுகிறது,

## நேரடி ஒலிபரப்பிற்கு ஈராக் தடை

இரண்டாவது நாளாக நடைபெற்ற குண்டுவீச்சில் ஈராக்கின் ஆறு நடமாடும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## 35 நாட்களில் குவைத் மீட்கப்படும்?

எதிர்வரும் பெப்ரவரி 25-ம் திகதி குவைத் தனது சுதந்திர தினத்தை கொண்டாட முன்னரே ஈராக்கிடமிருந்து குவைத் விடுவிக்கப்படும் என குவைத் பிரஜைகள் நம்பிக்கை வெளியிட்டனர்

இதேசமயம் நேற்று ஈராக்கிய தொலைக்காட்சியில் சதாம் ஹுசைன் வழிபாட்டில் ஈடுபட்டது ஒளிபரப்பப்பட்டது.

## குவைத்திலுள்ள ஈராக்கியபடைக்கு அமெரிக்கா துண்டுப்பிரசுர வீச்சு

குவைத்தில் நிலைகொண்டுள்ள ஈராக்கிய படைகளை நோக்கி அமெரிக்க விமானங்கள் துண்டுப்பிரசுரங்களை வீசிவருகின்றன.

அமெரிக்க அணியிடம் சரணடைந்து விடுங்கள்; இதன் மூலம் வீணான உயிரிழப்பை தடுக்கமுடியும்; சதாம் ஹுசைன் உங்களைப் பலியிடவே குவைத்திற்கு அனுப்பி வைத்தார் போன்ற வாசகங்கள் அத்துண்டுப்பிரசுரங்களில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

# வளைகுடா யுத்தம் மூண்டதன் பின்னணி

1990 ஆகஸ்ட் 2 ஆம் திகதி குவைத் மீது ஈராக் திடீரெனப் படையெடுத்தது.

★ ஈராக்கிற்கு அண்மையாக உள்ள எண்ணைக் கிணறுகளில் குவைத் எண்ணை திருடியது.

★ குவைத் அளவுக்கு அதிகமாக எண்ணை உற்பத்தி செய்து உலக சந்தையில் எண்ணையின்விலையை வீழ்ச்சியடையச் செய்து ஈராக்கிய பொருளாதாரத்தைப் பாதிப்படையச் செய்தது.

ஆகிய காரணங்கள் இப் படையெடுப்பிற்கு ஈராக் தரப்பில் கூறப்பட்டன.

இப்படையெடுப்பைப் பல உலக நாடுகளும் குறிப்பாக அமெரிக்காவும் வன்மையாக எதிர்த்தன. இவ்வெதிர்ப்புக்களின் பலனாக ஆகஸ்ட் 6 ஆம் திகதி ஐ.நா.சபை பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்தது. கைப்பற்றிய குவைத்தை விட்டு வெளியேறுமாறு அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஈராக்கை எச்சரித்தார்.

இதனிடையே ஈராக்கியப் படைகள் சவுதி அரேபியாவையும் தாக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகரித்ததையடுத்து அமெரிக்கா தனது சில படைப்பிரிவுகளைச் சவுதிக்கு 'ஒப்பரேசன் பாலைவனக் கவசம' (Operation Desert Shield) என்ற குறிப்பெயரிட்டு அனுப்பி வைத்தது இப் படைகள் ஈராக்-சவுதி எல்லைகளில் நிறுத்தப்பட்டு சவுதி அரேபியா காக்கப்பட்டது.

இதேவேளை அரபு லீக்கின் 20 நாட்டு உறுப்பினர்கள் கூடினர், அதன் பலனாக ஆரம்பத்தில் 12 அரேபிய நாடுகள் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவிற்கு துணையாகத் தமது படைகளை அனுப்பின. இது பின்னர் 28 நாடுகளின் படையணியாக மாறியது.

குவைத்தை ஆக்கிரமித்த ஈராக் அது தனது 19ஆம் மாகாணம் என்றதுடன் அங்கிருந்த வெளிநாட்டவரையும் பணயக் கைதியாகப் பிடித்து வைத்தது.

ஐ.நா 12 தீர்மானங்களை நிறைவேற்றி ஈராக்கை வெளியேறுமாறு கேட்டது. இதற்கு ஈராக் மறுக்க அமெரிக்கா 5 லட்சம் படை வீரரை வளைகுடாவிற்கு அனுப்பியது ஐ.நா.வின் 12ஆம் தீர்மானமான 678இன் படி ஜனவரி 15 இற்கு முன்னர் ஈராக் வெளியேறாவிட்டால் படைப்பலம் பாவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 11 இல் அமெரிக்க, ஈராக் வெளியுறவு அமைச்சர்கள் பேகரும்-அஸீசும் பேசினர். ஐ. நா. செயலர் பெரஸ்டிகுயிலர் பக்தாத் சென்று பேசினார். கடைசியாக பிரான்ஸ் 4 அம்சத் திட்டத்தினைக் கொண்டுவந்தது. அனைத்துமே தோல்வியில் முடிந்தன. இறுதியில் ஜனவரி 17 இல் பாரசீக வளைகுடாப் போர் Operation Desert Storm (பாலைவனப்புயல்) என்ற குறியீட்டுப்பெயருடன் மூண்டது அமெரிக்க மற்றும் அதன் 20 நேச நாடுகள் ஒருபுறம், மறுபுறம் ஈராக் களத்தில் இறங்கியுள்ளது போர் தொடர்கிறது .....

# இஸ்ரேல்மீது ஏவுகணைத்தாக்குதல்

## தரைமார்க்கமாகக் குவைத்துள் ஊடுருவ முயற்சி

வளைகுடாப் போர் தொடங்கிய இரண்டாவது நாளான நேற்றுக் காலை ஈராக் இஸ்ரேலின் மீது ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

பக்தாத்திலிருந்து ஏவப்பட்ட எட்டு ஏவுகணைகள் இஸ்ரேலின் டெல்அவிவ் பகுதிகளைத் தாக்கியதாகவும் இதனால் ஏழுபேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்த ஏவுகணைத் தாக்குதல் குறித்து ராடர் கருவிகளினால் முன் கூட்டியே அறிய முடியாமல் போய்விட்டதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் ஏவுகணைகள் விழுந்து வெடிக்கும் தறுவாயில் விமானத்தாக்குதல் எச்சரிப்பு விடுக்கப்பட்டு. நச்சுவாயு எதிர்ப்புக்கவசத்தை அணிந்து கொண்டு வீடுகளில் அதற்கென விசேடமாக அமைக்கப்பட்டுள்ள அறைகளிற்குள் சென்று பாதுகாப்புத் தேடிக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு வானொலி மூலம் இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டது. தாக்குதல் முடிவடைந்து 3 மணி நேரத்தின்பின்னர் பாதுகாப்பு அறைகளை விட்டு வெளியே வருமாறு பொதுமக்கள் இராணுவத்தினால் கேட்கப்பட்டனர்.

இந்த ஏவுகணைகள் நச்சு வாயுக்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என பின்னர் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஈராக், குவைத் மீதான அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் மோதல் நேற்று உக்கிர நிலையை அடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தரைமார்க்கமாக முன்னேற்றம்

பாலைவனப் போருக்கு பெயர் பெற்ற பிரிட்டனின் இராணுவ அணி ஒன்றும், அமெரிக்க அணியொன்றும் சவுதி அரேபியா எல்லை வழியாக தரைமார்க்கமாக குவைத்துக்குள் ஊடுருவ முயற்சி எடுத்து வருகின்றன.

### வான்பரப்பு அமெரிக்கா வசம்

இதனிடையே ஈராக்கிய யுத்தவிமானகளில் 50 வீதமானவை அழிக்கப்பட்டு விட்டதாகவும் எஞ்சியுள்ள யுத்த விமானங்களை ஈராக் இனி போருக்கு அனுப்பாது என தான் நம்புவதாகவும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஈராக், குவைத் வான் பரப்புக்கள் தம் வசம் வந்து விட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஆனால் ஈராக் வானொலி 65 விமானங்களைத் தமது படையினர் இதுவரை சுட்டு வீழ்த்தியிருப்பதாகவும் 23 குரூஸ் ஏவுகணைகள் வீழ்த்தப்பட்டதாகவும் தரைப்படைச் சண்டைக்கு தமது படைகள் காத்திருப்பதாகவும் அறிவித்துள்ளது. அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படைகளின் 3 விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஒன்று அமெரிக்காவின் ஜெட்-18 ரக யுத்த விமானமாகும். இதனை ஈராக்ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 'ஸ்காட்' ஏவுகணை மூலம் சுட்டுவீழ்த்தியதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

### 23 பொதுமக்கள் பலி

முதல்நாள் யுத்தத்தில் ஈராக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 66 பேர் படுகாயமுற்றதாகவும் ஈராக் வானொலி அறிவித்தது.

இது இவ்வாறிருக்க கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் ஈராக் படை வலிமை கொண்டதாகவே உள்ளதாகவும், வரும் நாட்களில் ஈராக் கடுமையான பதில் தாக்குதல் மேற்கொள்ளுமென எதிர்பார்ப்பதாகவும் பிரிட்டிஷ் இராணுவ அமைச்சர் தெரிவித்துள்ளார். ஈராக்கைப பிடிப்பதோ அழிப்பதோ அன்றித் தமக்குப் பிடித்த அரசொன்றை அங்கு அமைப்பதோ தமது படைகளின் நோக்கமல்ல எனவும் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

### 'இறுதிவெற்றி ஈராக்கிற்கே'

துரோக நாசகாரக் கும்பலை முறியடிக்க ஈராக் இப்போதும் தயாராகவே உள்ளது. எந்தவித தாக்குதல் இடம் பெற்றாலுங் இறுதி வெற்றி எமக்கே என ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைன் நேற்றுத் தொலைக்காட்சியில் அறிவித்தார்.

### 'அமெரிக்கா அவசரப் பட்டுவிட்டது'

வளைகுடா யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருமாறு பல உலகத் தலைவர்கள் ஈராக்கை கோரிவரும் அதேவேளை அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படைகள் ஈராக்கை தாக்குவதற்கு எடுத்த முடிவை வடகொரியா, கியூபா, ஜோர்டன், எமன் உட்பட சிலநாடுகள் பகிரங்கமாகக் கண்டித்துள்ளன. அமெரிக்கா அவசரப்பட்டு விட்டதாக அவை தெரிவித்துள்ளன.

### கடாபிஅமெரிக்காவுக்குஎச்சரிக்கை

வளைகுடாப்போரை உடன் நிறுத்துமாறும் ஈராக் தலைநகர் பக்தாத் மீது தாக்குதல் நடத்துவதைக் கைவிட வேண்டுமெனவும் லிபியா அதிபர் கடாபி கேட்டுள்ளார் வளைகுடா யுத்தம்உலகப் போராகமாறும் சாத்தியம் அதிகரிப்பதாகவும், அமெரிக்கா வளைகுடா எல்லையைத்தாண்டினால் ரஷ்யா எந்நேரமும் போரில் ஈடுபடும் எனவும் கடாபி தனது வானொலி உரையில் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்.

### துருக்கி இத்தாலி தயார்

துருக்கியில் அயல் நாட்டுப் படைகள் செயற்படுவதற்கும், இந்தசண்டையில் இத்தாலிய துருப்புக்களை ஈடுபடுத்துவதற்கும் அந்நாட்டு பாராளுமன்றங்கள் அனுமதி வழங்கியுள்ளன. அனுமதி வழங்கப்பட்ட சில மணி நேரத்துக்குள் துருக்கியிலிருந்து 25 அமெரிக்க விமானங்கள் தாக்குதலுக்கு புறப்பட்டுச் சென்றன.

### சரணடையும் வரை சண்டை

தனது படைகள் செயற்படும் விதம் குறித்து திருப்தி தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி புஷ் குவைத்திலிருந்து ஈராக்கிய படைகள் வெளியேறி, ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் சரணடையும்வரை சண்டை தொடரும் என நேற்று அறிவித்துள்ளார். அத்துடன் ஈராக் இரசாயன ஆய்வுகளைப் பாவித்தால் தாக்குதல் விஸ்தரிக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். சதாம் ஹுசைனை சரணடையுமாறு கோரும் பிரசுரங்களை அமெரிக்க விமானங்கள் ஈராக்கில் வீசின.

### ஈராக்கியர் அகதிகளாகின்றனர்

ஈராக் மீதான தாக்குதல்கள் ஆரம்பமானதைத்தொடர்ந்து ஈராக் மக்கள் ஜோர்டான், ஈரான் நாடுகளை நோக்கி அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

### அமெ. எதிராக ஊர்வலங்கள்

வளைகுடாவில் யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளை உலகின் பல பகுதிகளிலும் அமெரிக்காவுக்கும் அதன் தலைமையிலான பன்னாட்டுப்படைகளுக்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈராக்கிற்கு ஆதரவானவர்கள் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலை ஆட்சேபித்து மத்திய பேர்லினில் 20,000க்கும் மேற்பட்டோர் ஆட்சேப ஊர்வலம் நடாத்தியுள்ளனர்.

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க நிறுவனங்கள் சிலவற்றின் முன்னாலும் இத்தகைய எதிர்ப்பு ஊர்வலங்கள் இடம் பெற்றுள்ளன.

பிலிப்பைன்ஸில் உள்ள அமெரிக்க இராணுவத்தளங்கள் கம்யூனிஸ்ட் போராளிகளினால் தாக்கப்படலாம் என பிலிப்பைன்ஸ்-அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு ஜனாதிபதி சதாமுக்கு ஆதரவான போராளிகளின் வேலை என புதுடில்லிப் பொலிஸார் தற்போது கருதுகின்றார்கள்.

# யாழ் வைத்தியசாலையில் திங்கள் முதல் இரு சத்திரசிகிச்சைக் கூடங்கள் இயங்கும்

யாழ் போதனா வைத்தியசாலையின் பெரிய சத்திர சிகிச்சை நிலையம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இயங்கவுள்ளது.

எனினும் மின்சாரத் துண்டிப்பு, போதிய சத்திரசிகிச்சை உபகரணம் இன்மை போன்ற காரணங்களால் அவசர சத்திரசிகிச்சைகள் மட்டுமே இங்கு மேற் கொள்ளப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் நகரில் இடம்பெற்ற வன்செயலின்போது இப்பெரிய சத்திரசிகிச்சைக் கூடம் பாதிப்படைந்து இருந்தது. இதனையடுத்து சிறிய சத்திர சிகிச்சைக் கூடமே இதுவரை இங்கு இயங்கி வந்தது. (74)

## மட்டு. மாணவருக்கு மதிய உணவு முத்திரை

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு லட்சத்து ஐயாயிரம் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.


## லண்டன் பிற்மன் சுருக்கெழுத்து / தட்டெழுத்து பரீட்சை - 1990

கடந்த ஜூலையில் நடைபெறாத மேற்படிபரீட்சையை இம்மாதம் இறுதியில் நடாத்தத் தீர்மானித்துள்ளோம். தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் கல்விப்பிரிவின் மூலம் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் உடுவில் மகளிர் கல்லூரியில் 21, 22, 23ஆம் திகதிகளில் பகல் 1 - 2 மணிக்கும் இடையில் உங்கள் ஆசிரியையை தவறாமல் சந்தித்துப் பரீட்சை நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
01132

## தாதிப் பயிற்சி நெறி
## Diploma in Nursing

10.2.1991 இல் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
(1½ வருட காலப் பயிற்சிநெறி)

விபரங்கட்கு:

அதிபர்
சாயி மெடிக்கல் அக்கடமி
இல:- 6, பருத்தித்துறை வீதி, (முதலாம் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.
01119

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

என்னால்புதிதாகத் திறக்கப் பட்ட பண்ணையில் மிளகாய், கத்தரி, கோவா, பீற்றூட், போன்ற மரக்கறி விதைகளும், நாற்றுகளும் வீட்டுத் தோட்ட உர வகைகளும் விற்பனை செய்யப் படுகின்றன. சிவ ஐங்கரன் விவசாய விற்பனை நிலையம்- அராலி மத்தி. வட்டுக்கோட்டை 01133

# மட்டு. மாவட்ட அரச அதிகாரிகள்

## மாவட்டத்தை விட்டு வெளியேற இராணுவம் தடை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமைபுரியும் அரச அதிகாரிகள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

இது தொடர்பான உத்தரவு மட்டு. மாவட்ட இராணுவ பிரிகேடியர் செனிவிரட்னாவினால் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பதவி நிலை உத்தியோகத்தர்கள் எவராவது வெளி மாவட்டங்களுக்கு எக் காரணங்கள் கொண்டாவது செல்ல வேண்டி ஏற்பட்டால் அதற்கான அனுமதியை அரச அதிபர் மூலம் இராணுவத்தினரிடம் பெறல் வேண்டுமெனவும், எழுத்துமூல அனுமதியின்றி இந்த அதிகாரிகள் மட்டு.மாவட்டத்தை விட்டு வெளியேறக் கூடாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சாவகச்சேரியில் 'மாங்கல்யம்'

இந்துமக்கள் மத்தியில் திருமண சேவைகளை நடத்துவதற்கென தென்மராட்சியில் ''மாங்கல்யம்'' என்னும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இலாப நோக்கம் ஏதுமின்றி சேவையை இலட்சியமாக கொண்ட இந்த அமைப்பின் தலைவராக வித்துவான் வேதவனம் ஆறுமுகமும், செயலாளராக சுபபிரமணி ஐயரும் தெரிவுசெய்யப் பட்டுளளனர்.

நாளை ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் மண்டபத்தில் இவ் அமைப்பின் முதலாவது செயற்குழு கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (ப—4)

### கூட்டுறவு ஊழியர்களுக்கும் விசேடபடியை வழங்கப் பணிப்பு

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து அரச,கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மேலதிகக் கொடுப்பனவுகளைக் கூட்டுறவு ஊழியர்களுக்கும் வழங்குமாறு கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இதன்படி இணைந்த சம்பள அளவுத் திட்டத்தில் ஆரம்பப்படியாக 2000 ரூபா மற்றும் அதற்குக் குறைந்த தொகையைப் பெறுபவர்களுக்கு 300 ரூபா கொடுப்பனவும், ரூபா 2001 தொடக்கம் ரூபா 3000 வரை பெறுபவர்களுக்கு 200 ரூபாவும் வழங்கப்படவேண்டும்.

தற்காலிக, பதில்,அமைய, மற்றும் நாளாந்த சம்பளங்களைப் பெறும் எல்லாக் கூட்டுறவு ஊழியர்களுக்கும் மாதாந்தம் 21 நாட்களை அடிப்படையாகக் கொண்டு வேலை செய்த நாட்களின் விகிதாசாரத்திற்கு இணங்க இக்கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் எனவும் இச் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (66)

### கோம்படிவழியாக அதிக பயணிகள்

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு கொம்படி வெட்டைப் பாதை வழியாகச் செல்லும் பிரயாணிகள் வியாபாரிகள் தொகை கடந்த இரண்டு நாட்களாக மீண்டும் அதிகரித்துள்ளது.

கொம்படிவெட்டைப்பாதையால் எவ்வித தாமதமுமின்றி உடனுக்குடன் படகுகள் மூலம் இக்கரையிலிருந்து அக்கரைக்கும். அக்கரையிலிருந்து இக்கரைக்கும் பிரயாணம் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

### அரச ஊழியர் காப்புறுதித் திட்டம் இம் மாதம் முதல் அமுலாகிறது

அண்மையில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசு ஊழியர்களுக்கான காப்புறுதித்திட்டம், காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் இம் மாதத்திலிருந்து அமுல் படுத்தப்படவுள்ளது.

ஊழியர்களது சம்பளத்தில் இருபது ரூபா மாதா மாதம் அறவிடப்படும் தை மாதச் சம்பளத்தில் இத் தொகையை அறவிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு ஊழியர்களும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள படிவத்தை நிரப்பித் திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இத் திட்டத்தினால் பல அரச ஊழியர்கள மருத்துவ வசதிகளைப் பெற வழி பிறக்குமென பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபம் கூறுகின்றனர்.

இக் காப்புறுதித் திட்டத்தில் ஒய்வூதியம் பெறுபவர்களும் விரும்பும் பட்சத்தில் சேர்ந்து கொள்ள முடியுமெனச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-1)

### உள்ளூராட்சி ஆதனவரி பத்து சத வீதத்தினால் அதிகரிப்பு

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள நகரசபை, மாநகரசபை, பிரதேச சபைகள் ஆகியவற்றிற்கு உட்பட்ட ஆதனங்களின் வரி அறவீடு அதிகரிக்கப் பட்டுள்ளது

இவ் வருடம் முதல் இந்த வரி பத்து சத வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வரியை வரியிறுப்பாளர்கள் நான்கு கந்தாயங்களாகச்செலுத்த முடியும் எனவும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. (ப-1)

### மருந்துவகைகளைத் தருவிப்பதற்கு வைத்தியர் குழு கொழும்பு செல்கிறது

யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள குறைபாடுகளைச்சுகாதார அமைச்சுக்கு சுட்டிக்காட்டுவதற்கென குழு ஒன்று அடுத்த வாரம் கொழும்பு செல்லவுள்ளது.

இக்குழுவில் வைத்தியசாலையைச் சேர்ந்த சில டாக்டர்களும் அங்கம் வகிக்கின்றனர்.வைத்தியசாலைக்கு தேவையான மூக்கிய மருந்து வகைகளை இங்கு தருவிப்பது தொடர்பாக இவர்கள் முக்கியமாக சுகாதார அமைச்சு உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்துவர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

### றிச்சர்ட் டி சொய்ஸாவுக்கு சர்வதேச பத்திரிகையாளர் விருது

கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளரும், தொலைக்காட்சி அறிவிப்பாளரும், கலைஞருமான 33 வயதான றிச்சர்ட் டி சொய்ஸாவுக்கு 'சர்வதேச பத்திரிகையாளர் விருது' வழங்கப்பட்டுளளது.

இவரது தாயார் டொக்டர் மனோராணி சரவணமுத்துவுக்கு அவரது மகன் சார்பில் நியூயோர்க்கில் உள்ள ஐ நா. தலைமைச் செயலகத்தில் நிகழ்ந்த வைபவம் ஒன்றில் வைத்து விருது வழங்கப்பட்டது. (71,

### யாழ் மாவட்ட விஞ்ஞான ஆசிரியர்க்குப் பல்கலைக்கழகத்தில் செய்முறைப்பயிற்சி

யாழ் மாவட்டத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பத்து உயர்வகுப்பு விஞ்ஞான ஆசிரியர்களுக்கு விஞ்ஞான உபகரணங்களைப் பழுது பார்ப்பதற்கும், அவற்றைக் கையாள்வதற்குமான செயல் விளக்கத்துடன் கூடிய செய்முறைப் பயிற்சி ஒன்று நடாத்தப்படவுளளது.

யாழ் பல்கலைக்கழக விலங்கியற்துறை உறுப்பினர்கள் இதனை நடாத்தவுள்ளனர்

இப்பயிற்சி இன்று 19ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ் பல்கலைக்கழக விலங்கியற் துறையில் நடைபெறும் என யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார்

(70, 74, ப-11)

### தாச்சிப்போட்டி

அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையம் மார்ச் மாத நடுப்பகுதியில் யாழ் மாவட்ட ரீதியில் தாச்சி சுற்றுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூஷியாவின் இன்றைய போக்கில் ஆன்மீக நெறியும் அதன் ஆதார தத்துவங்களும் எவ்வளவு தூரம் ஊடுருவி, உள் நுழைந்து, ஆராயவைத்துள்ளனவென்பதைஇக்கட்டுரை விளக்குகிறது.

## ரூஷிய மேடையில் ஆழ்நிலைத் தியானம்

ரூஷிய அறிஞர்கள் தற்போது ஆன்மிக நெறிகளையும் அவை உணர்த்தும தத்துவங்களையும் ஆராயத் தலைப்பட்டுள்ளனர். இந்த ஆவல் பல புதிய தகவல்களைத் தருகின்றது அத்தோடு கீழைத்தேய மக்களின் பாரம்பரிய அறிவாற்றலையும் நுண்ணுணர்வையும் மறு பரிசீலனைக்குள்ளாக்குகின்றது. மனோதத்துவப் பரிசோதனை அரங்கிலேயே பல அரிய அனுபவ தரிசனங்கள் எந்த வித மூடு மந்திரங்களும் இல்லாமல் காட்டப்படுகின்றன,

அது ஒரு பரிசோதனை அரங்கம். முந்நூறு பேரைக் கொள்ளும். அங்கு வந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் - டொக்ரர், கல்லூரி மாணவர், தொழிலாளர்—ஒவ்வொரு பிரச்சினை. நோய் அறிகுறி, மனக்குழப்பம் கொண்ட கூட்டம் மிகையீல் ஷோய்பெத் அங்கு வருகிறார். எல்லோரும் அவர் வசமாகிறார்கள். அவரவர் திறமைக்கேற்பச் செயற்படுகிறார்கள். தமது பள்ளிபபருவத்திலேயே மறந்துபோன அந்நிய மொழிகளை மிகவும் சரளமாகப் பேசுகிறார்கள்.

''அவர் எங்களை இசைக்கு ஆட்படுத்தினார். இப்போது நாங்கள் அனைவரும் ''ஹம்லெற்'', ''கிங்லியர்'' நாடகங்களில் நடிக்கும் நடிகர்கள்; இசைப்பாடகர்கள்—இது நாங்கள் எதிர்பார்த்த எல்லாவற்றையும் விட விஞ்சியது. நாங்கள் கவிதை எழுதினோம், சித்திரம் வரைந்தோம் (பலர் தமது வாழ்வில் முதன் முறையாக இப்போதுதான் தூரிகையையே கையில் எடுத்திருப்பர்); நாங்கள் தன்னிச்சையாக இயங்கினோம் எல்லாவற்றையுமே துல்லியமாகச் செய்து முடிந்தோம்''.

''இறுதியில், நாங்கள் நல்ல பயன்களைப் பெற்றுள்ளதைத் தெரிந்துகொண்டோம்; வழக்கமான சுயப்பயிற்சி மூலம் இதைப் பெறுவதற்குப் பல ஆண்டுகள் ஆகும்'' என்று பரிசோதனை அரங்கில் பங்கு கொண்டவர்கள கூறுகிறார்கள்.

மெல்ல நகரும் இந்த ஏமாற்று உலகில் அற்புதங்கள் புரிவோரில் மிகையீலும் ஒருவரல்ல. ''நான் வெறும் மனோதத்துவ நிபுணர்தான்; என்னிடம் இரகசியம் எதுவும் இல்லை. இங்கு வந்த இவர்கள் செய்தது என்னவென்றால் ஆழ்நிலைத் தியானம், அவ்வளவு தான். ஆழ்நிலைத்தியானமென்பது ஒரு வகை மனோதத்துவப் பயிற்சியேயாகும். புதிய கண்ணோட்டத்தைப் பெறவும் ஒருவரது மூளையை முடிந்த அளவிற்குச் சிறப்பாகச் செயல்படச் செய்யவும் இது உதவுகிறது'' என்று அவர் விளக்குகிறார்.

மேலும் அவர், 'உங்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் அகத்தூண்டுதல் நிலைக்கு உங்களை நீங்களே கொண்டு வரமுடியும் நம்மில் பெரும்பாலோர் நம்மிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை உணர்ந்து கொள்வதில் மிகவும் சோம்பேறிகளாக இருக்கிறோம். நம்மோடு கூடப் பிறந்த நமது திறமைகளைப் பற்றி நமக்கு ஏதும் தெரிவதில்லை இந்த உலகமே ஒரு நாடகமேடை. நாம் நடிகர்கள் நம் உண்மை இயல்புகளைச் சூழ்நிலைகள், கட்டுப்பாடுகள் காரணமாக நாம் வெளிப்படுத்தாமலிருக்கிறோம். வெளித்தோற்றங்களுக்குப் பழக்கப்பட்டு வளர்கிறோம் நாம் தன்னிச்சையாகவும், நலம் கருதியும் நம்திறமைகளைக் கை விடுகிறோம். நமது உண்மையான இயல்பை இழக்கிறோம் என விபரிக்கின்றார்.

மிகையீல் ஷோய்பெத்தின் இந்த மனோதத்துவப் பரிசோதனை அரங்கம் ரூஷியாவில் இன்று மிகவும் பிரபல்யம் வாய்ந்த மேடை ஆழ்நிலைத்தியான அரங்காகப் பெயர் பெற்றுள்ளது.

பயிற்சி நோக்கங்களுக்காகவும், பரிசோதனை நோக்கங்களுக்காகவும் அவசரகால சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்ள இவரது வழிமுறை வாய்ப்பளிக்கிறது. ஒருமுறை தீயணைப்புப்படை ஒன்றுக்காக விண்வெளிக்கலம் ஒன்று தீப்பிடிப்பது போன்ற ஒரு காட்சியை மிகையீல் ஷோய்பெத் உருவாக்கினார். பின்னர் அப்படையினர் அந்த இடத்தில் தம் ஒவ்வொருவருக்கும் தகுதியானது எது என்பதைக்கண்டு கொண்டனர் சிலர் தமது உயிரைக்காக்க ஓடினர். சிலர் மறைவிடத்தில் ஓடி ஒளித்துக்கொள்ள முற்பட்டனர். ஒரு சிலர் மட்டுமே அந்தக் கற்பனைத்தீயோடு போராடினர்.

ஷோய்பெத் அரங்கம் ஒரு பிரசித்தி வாய்ந்த வசியத்துயில் முறை உளவியல் சிகிச்சை நிலையமாகும் உள் மனதில் உறைந்து மறைந்து கிடக்கும் மனவேதனைகளின் அடையாளங்களையும் பல உடற் கோளாறுகளின் அடையாளங்களையும் இவ்வரங்கின் மூலம் மிகையீல் கண்டு பிடித்திருக்கிறார்.

ஆழ்நிலைத்தியானத்திற்குச்சில பயிற்சிகள்தேவைப்படுகின்றன. எனது முதல் பயிற்சித் தொடரின்போது தேவையான மனநிலையை என்னால் பெற முடியவில்லை; அதனால் உண்மையிலேயே நான் ஏமாற்றமடைந்தேன். ''சரி போகட்டும் விடுங்கள் 'வசியநிலை' என்ற வார்த்தையை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அதுதான். சாதாரண மானவர்கள் எவரும் இதைத்தான் செய்வார்கள். வசிய நிலையில், தூக்கத்தில் நடப்பவர்களைப்போல் ஆகவேண்டுமென்று பலர் எதிர்பார்க்கிறார்கள், சொன்னபடி கேட்கும் கைப்பொம்மைகளாக அவர்களை நான் ஆக்காதபோது என்னை ஒரு போலி மருத்துவர் என்று கருதுகிறார்கள் ஆனால் என்னிடம் வருபவர்களை உணர்வுள்ள மனிதர்களாக ஆக்குவதே என் நோக்கமாகும் என்று மிகையீல் ச யுளளார்.

—04 ஆம் பக்கம்

6 லட்சம் ரூபா செலவில்

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு

# கரைவலை மீன்பிடித்திட்டம்

இடம் பெயர்ந்த, பாதிப்படைந்த மீனவர் குடும்பங்களுக்கு ஆறு லட்சம் ரூபா செலவில் கரைவலை மீன்பிடித் திட்டம் அரம்பிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கடற்தொழில் பிரிவினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத் திட்டத்திற்கு ஆரம்பக் கட்டமாக கற்கோவளம். குடத்தனை, நாகர் கோவில், செம்பியன் பற்று, மருதங்கேணி, வெற்றிலைக்கேணி கட்டைக்காடு ஆகிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்தோர்களில் 75 சதவீதமானோரும் வறிய பாதிப்படைந்த கிராம மக்கள் 25 சதவீதமானோரும் இத் தொழிலில் ஈடுபடஉதவியளிக்கப்பட்டுள்ளது.

மீன் பிடிவள்ளங்கள், வலைகள் மற்றும் உபகரணங்கள் பெறுவதற்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் ஒவ்வொரு கிராமத்திற்கும் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

50 குடும்பங்களைக் கொண்ட குழுவினர் சுழற்சி முறையில் இத் தொழிலை மேற்கொண்டு வருவாயினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இக்கரை வலைத் திட்டத்தில் பெருமளவு மீன்களைப் பிடிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுவதால் இவற்றைச் சந்தைப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகள் ஆகியனவும் செய்து கொடுக்க கடற் தொழில் சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. (66)

### ரூஷிய...

'நீங்கள் வசியப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் கூட நீங்கள் உங்கள் பகுத்தறிவுடனேயே நடந்து கொள்கிறீர்கள். உங்கள் நடத்தைக்கு மாறாக நீங்கள் நடக்க முடியாது. உங்கள் மூளை அற்புதமான உளநிலை — உடலியல் பாதுகாப்பு அமைப்புக் கொண்ட ஒரு கொம்ப்யூட்டராகும். மனதை வசியப்படுத்துவோரது எந்த ஒரு செயலையும் இது தடுக்கிறது; இது தீங்கு விளைவிப்பது என்று அது கருதுகிறது'.

இவ்வாறு அவர் ஒவ்வொரு பரிசோதனைத்தொடர் முடிவிலும் ஒரு சிறிய சொற்பொழிவே நிகழ்த்துகிறார்,

'ஒரு புதிய மன நிலையில் நீங்கள் ஒரு மாலைப் பொழுதைக் கழித்திருக்கிறீர்கள். தற்போது இது உங்கள் நினைவில் ஆழப்பதிந்திருக்கும்' உங்களது மனவலிமைதான் அதை வெளிக்கொணரும் திறவுகோல். ஒவ்வொரு நாளும் ஒரு சிறிது நேரத்திற்கேனும் நீங்கள் மிகவும் சோம்பேறியாக இல்லாதிருப்பீர்களேயானால் அன்றாட விஷயங்களிலே உங்கள் மனதை நீங்கள் திட்டமிட்டு இயக்குவீர்கள். கவிதை எழுதுவது, நோயாளியைப் பரிசோதிப்பது, சில தகவல்களை நினைவுபடுத்திப் பார்ப்பது போன்ற விஷயங்களில் வழக்கத்தைவிட நீங்கள் மிகவும் திறமையோடு செயற்படுவீர்கள். ஓர் ஒப்பற்ற நரம்பு மண்டலக் கொம்யூட்டரான உங்கள் மூளையை நிர்வகிக்க நீங்கள் படிப்படியாகக் கற்றுக் கொள்வீர்கள். ஆழ்நிலைத்தியானம் செய்ய முயலுங்கள். இப்போதே அதற்கு முயற்சி செய்ய முன் வாருங்கள்'.

நன்றி: புதுப் புனல்

### காசோலைகளை...

துள்ள அறிக்கையில் இவ்வாறு பணம்மாற்றிக் கொடுக்கும் முறையில் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதுடன், போராட்ட சூழ்நிலையைப் பயன்படுத்தி மக்களை இன்னலுக்குள்ளாக்கும் எந்தச் செயலுக்கும் புலிகள் ஒப்புதலோ, ஒத்துழைப்போ அளிப்பதில்லை என்பதையும் மக்கள் நன்கறிவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

### கிளிநொச்சியில்...

கெடுத்து ஓடுகிறது. 3 ஆம் வாய்க்காலில் பல வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இரணைமடுக்குளம் உடைக்கலாம் என்ற அச்சத்தால் அதனைத்தடுக்கும் பணிகளில் விடுதலைப்புலிகள் இரவு பகலாக ஈடுபட்டுள்ளனர்.

பரந்தன், முல்லைத்தீவு வீதியில் இரண்டாவது மதகு உடைந்துள்ளது. (66)

### பக்தாத்...

நேற்றைய தாக்குதலினால் பக்தாத்தில் ஜனாதிபதி மாளிகை முற்றாகவே சேதமடைந்தது. தொலை தொடர்பு திணைக்களம். தொலைக்காட்சி நிலையம் என்பனவும் குண்டுவீச்சால் சேதமடைந்தன.

இதனிடையே நேற்றுவரை அமெரிக்கா மற்றும் நேச நாடுகளின் 72 போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது, எனினும் இதை மறுத்த அமெரிக்கதரப்பு, தமது நாட்டைச் சேர்ந்த தாக்குதல் விமானங்களரான ஏ-60, எப்-15 கடற்படை விமானமான ஹோர்னட் எப்-15 ஆகிய மூன்று விமானங்களும், பிரிட்டனின் ரொனாடோ விமானம்-3, இத்தாலியின் ரொனாடோ விமானம் ஒன்றுமாக மொத்தம் 7 விமானங்களே தாம் இழந்ததாக கூறியுள்ளது.

### ஈராக்கை நமது...

தாக்கும் எண்ணத்தில் இஸ்ரேலிய விமானங்கள் ஜோர்தான் வான்பரப்பூடாக சென்றால் தாக்கப்படும் என ஜோர்தான் எச்சரித்துள்ளது. இத்தகைய எச்சரிக்கையை எகிப்துவும் விடுத்தது.

இஸ்ரேல் மீது நேற்று அதிகாலை ஈராக்நடத்திய ஸ்காட் ஏவுகணைத்தாக்குதலினால் ஐந்து இஸ்ரேலியர்கள் இருதய நோயினால் பின்னர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதே சமயம் சிரியா மீது பறந்த இஸ்ரேல் விமான அணிமீது சிரியா நடத்திய தாக்குதலில் ஒரு விமானம் சேதமடைந்ததாக ஜோர்தான் வானொலி அறிவித்தது.

அமைச்சர் ரஞ்சன் தகவல்

# யுத்த நிறுத்தத்தை அரசு மீறியதா செஞ்சிலுவைச் சங்கம் விசாரிக்கும்

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்ததையடுத்து அரசும் ஏழு நாட்கள் போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தது தெரிந்ததே. அதனை அரசு மீறியதா என்பதை விசாரிக்குமாறு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவிடம் கோரியுள்ளோம்.

பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

# 3 ஆம் கட்ட நிவாரணம் சில இடங்களில் ஆரம்பமாகவில்லை

சகலருக்குமான 3ஆம்வாரத்திற்கான விநியோகம் பற்றி யாழ் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டு ஒரு வாரகாலமாகியும் சில கூட்டுறவுச் சங்கங்கள் இன்னும் இவ்விநியோகத்தை ஆரம்பிக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை 4 ஆம் வாரத்திற்கான விநியோகத்தை அடுத்தவாரம் ஆரம்பிக்க செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (77)

### தடுப்பூசி...

றப்பட்ட தடுப்பூசி மருந்துகளின் 2ம், 3ம் 'டோஸ்கள்' உரியகாலத்தில் கொடுக்கப்படாததால் அவற்றின் நோய் எதிர்க்கும் சக்தி அற்றுப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மருந்துகளைக் கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் குறிப்பிடத்தக்க வெற்றி எதுவுமே கிட்டவில்லை.

கடந்த ஆண்டில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் ஓரளவு வெற்றியளித்த போதிலும் இப்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டால் அதன் பலாபலன்களைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்காக சென்ற ஆண்டு யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களம் ஐ.நா சிறுவர் நிதியத்தின் சிறப்பு பரிசைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (70, 71)

### யாழ்...

நாய்கள் வரை ஆஸ்பத்திரி வளவில் நிரந்தரமாக தங்கி இரவு பகல் ஊளையிட்டு நோயாளர்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்துகின்றன. (71)

### நேரடி...

ஏவுகணை தளங்களையும் மூன்று ரோந்துபடகுகளையும் அழித்ததாக அமெரிக்கதரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதே வேளை பக்ராவில் சில அமெரிக்க விமானிகள் கைது செய்யப்பட்டதாக ஈராக் முதலாம் நாள் குண்டுவீச்சு தொடர்பான வீடியோ படங்களை அமெரிக்கா நேற்று வெளியிட்டுள்ளது.

இதேசமயம் ஈராக்கிய ராணுவ அதிகாரிகள் பக்தாத்தில் உள்ள CNN செய்தி நிறுவனநிருபர்களிடம் யுத்தம் குறித்து நேரடி ஒலிபரப்பு செய்யவேண்டாம் என பணித்துள்ளது. இச்செய்திநிறுவனமே முதன் முதலாக யுத்தம் ஆரம்பித்ததை நேரடியாக ஒலிபரப்பியது என்பது குறிப்பிடத்தக்கது.


## கண்ணீர் அஞ்சலி

எங்களிந்துவின்
சோதியொன்று
நேற்று அணைந்தது
நெஞ்சு கனத்தது

சொல்லியழவொரு
வார்த்தை தேடுது
சொந்தங்களுடன்
வேதனை பகிருது

யாழ் இந்துவின் முன்னாள் உப அதிபர்
திரு, பொன். மகேந்திரன் அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்
யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள்

19-01-91 01138



## கண்ணீர் அஞ்சலி
## அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரியின் நீண்டகால ஆசிரியரும், முன்னாள் பிரதி அதிபரும், எமது சங்கத்தின் மூத்த உறுப்பினருமாகிய பொன். மகேந்திரன் அவர்களின் திடீர் மரணச் செய்தி சகல உறுப்பினர்களுக்கும் அதிர்ச்சி தருவதாக அமைந்துள்ளது. சங்கம் தனது ஆழ்ந்த கவலையை அவர் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் தெரிவிக்கின்றது.

சகல பழைய மாணவர்களும் 20-01-91 ஞாயிற்றுக் கிழமை காலை 8-00 மணிக்கு அமரர் மகேந்திரன் இல்லத்தில் கூடும்வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

டபிள்யூ. எஸ். செந்தில்நாதன், தலைவர்
சுந்தரம் டிவகலாலா, பொதுச்செயலாளர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

19-01-1991 01137



## முக்கிய அறிவித்தல்
## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா

எமது கல்லூரியின் பழைய மாணவரும், நீண்டகாலமாக ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவருமான,

திரு, பொன், மகேந்திரன்

அவர்களின் திடீர் மறைவு காரணமாக, 18. 1. 1991 (பிற்பகல் நிகழ்ச்சிகளும்) 19, 20. 01. 1991ஆம் நாள் நிகழ்ச்சிகளும் மறு அறிவித்தல் வரும்வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

சுந்தரம் டிவகலாலா
சே. சிவராஜா
இணைச் செயலர்,
நூற்றாண்டு விழாச்சபை.

க. சி. குகதாசன்
தலைவர்,
நூற்றாண்டு விழாச்சபை.
18. 01. 1991

01136



## அஞ்சலி
## அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், நீண்டகாலம் கல்லூரியின் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவருமாகிய,

அமரர் பொன். மகேந்திரன் அவர்களின் திடீர் மறைவுக்கு யாழ். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தனது ஆழ்ந்த கவலையையும், அஞ்சலியையும் அவர்தம் குடும்பத்தாருக்குத் தெரிவிக்கின்றது.

க. சி. குகதாசன்
தலைவர் / அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம். 19. 01. 1991.

க. பூபாலசிங்கம்
பொதுச்செயலாளர்

01135


பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் [...]னத்தினரால் யாழ் கல்வியங்காடுடச்சு வீதி. 'லக்ஷ்மிபில்டிங் [...]ள அச்சகத்தில் 19-01-1991இல் அச்சிட்டு வெளியிடப்